மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. மத்திய அரசின் கொள்கையைப் பொறுத்துத்தான் இதுவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி போன்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இலக்குக்கு அதிகமாகவே கரும்பு வருகிறது. ஆனால் பெரம்பலூர் போன்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 1,500 டன் அரைக்க வேண்டும் என்று இலக்கு வைத்திருந்தால், 700–800 டன்னுக்குக் கூட கரும்பு வருவது இல்லை. ஆகவே, அப்படி அதிகமாக கள்ளக்குறிச்சி போன்ற சர்க்கரை ஆலைகளுக்கு வரும் கரும்பை, பெரம்பலூர் போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்க அரசு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல் நிலைமைகள் இருந்தால் அரசு பரிசிலனை செய்யும்.

சென்னை கடற்கரையை அழகுபடுத்தல்.

*281—வினா—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் தற்பொழுது எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டுள்ளது ?

(ஆ) அதற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) சென்னை வானொலி நிலையத்திலிருந்து நேப்பியர் பாலம் வரையில் உள்ள சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்துவதற்கான திட்டம் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதற் பகுதியாக சென்னை வானொலி நிலையத்திலிருந்து காந்தி அடிகள் சிலைவரை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 2,90,855 ஆகும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக நீண்டகாலமாக கடற்கரையில் மக்களின் நடமாட்டம் அதிகமாகி அங்கேயிருக்கும் மணல் அழுக்காகி இருப்பதால், அதை மாற்ற அரசிடம் வேறு ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, அந்த மெரீனு கடற்கரையை எழில்படுத்துவதற்காகத்தான் அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது. 6 பகுதிகளாக அது பிரிக்கப்பட்டு முதல் பகுதி நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. மீதியுள்ள 5 பகுதிகளுக்கான வரைவு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவரவர்களே, நீண்ட காலத்திற்கு முன்பு பேரறிஞர் அண்ணு அவர்கள் ''திராவிட நாட்டில்'' சென்னை கடற்கரை அருகில் ஒரு கலைக்கூடத்தை அமைத்து, அந்தக் கலைக்கூடத்தில் பண்டைய ஐம்பெரும் காப்பியங்களை வரைந்து, பழைய தமிழர் பண்பாட்டை விளக்கும் கலைக்கூடமாக அதை நிறுவி, அயல் நாட்டினரையும் கவரத்தக்க வகையில் அந்தக் கலைக்கூடத்தை அமைக்கவேண்டும் என்று எழுதியிருந்தார்கள். அதை நிறைவேற்றும் வகையில் அரசிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணு அவர்களின் சமாதிக்கு அருகில் அத்தகைய ஒரு நிலையம் ஏற்படுத்தி அதிலே அறிஞர் அண்ணு அவர்கள் எழுதிய புத்தகங்கள், அவர் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றை வைப்பதற்கு ஏற்கனவே அரசு ஆலோசனை செய்துகொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த யோசனையையும் அதோடு சேர்த்து பரிசீலிக்கப்படும்.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவரவர்களே, நான் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த அழுக்கடைந்த மணலை அகற்ற முந்தைய அரசிடம் திட்டம் இருந்ததாக அறிகிறேன். ஆகவே, அந்த அழுக்கடைந்த மணலை அகற்ற அந்தத் திட்டத்தில் வகைசெய்யப்பட்டு இருக்கிறதா? அந்த அழுக்கடைந்த மணலை எடுத்து விட்டு, அந்தக் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததுபோல், சுமார் ரூ. 3 லட்சம் அளவிற்கு வேலைகள் நடந்து இருக்கின்றன. மேலும் ஒரு ரூ. 20 லட்சத்திற்கான அளவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு வேலைகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. அதிலே மணலை அங்கே கொண்டுபோய் போடுவதற்கும், பார்க்குகள், குன்றுகள் அமைப்பதற்கும்; செடிகள் வளர்ப்பதற்கும், புல் தழைகள் வளர்ப்பதற்கும் என்று பல்வேறு வகையான மேம்பாட்டுத் திட்டங்கள் செய்யப்படவேண்டும் என்று அரசுக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

[1978 பிப்ரவரி 27

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பம்பாய், கல்கத்தா ஆகிய கடற்கரையோர நகரங்களுக்கு மானியம் அளித்து வருவதாகத் தெரிகிறது. அதேபோல், நம்முடைய அரசுக்கும் ஏதேனும் மத்திய அரசு மானியம் அளித்து வருகிறதா?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற கடற்கரைகளுக்கு மானியம் கொடுக்கிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் நம்முடைய சென்னை கடற்கரையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான மானியமும் தரப்படவில்லை.

திரு. மு. சிவபெருமாள்: தலைவரவர்களே, அந்த அழகுபடுத்தும் திட்டத்தில், ஹாஸ்டலுக்கு முன்னால் இருக்கும் இடமும் சேர்த்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சேர்த்துக்கொள்ளப் படமாட்டாது.

முஸ்குந்தா நதியின் குறுக்கே அணை.

*282 வினு—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென்னுற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலூக்கா சங்கராபுரம் தொகுதியில் உள்ள லக்கிநாயக்கன்பட்டி அருகே உள்ள முஸ்குந்தா நதியின் குறுக்கே அணை கட்டும் திட்டத்திற்கு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் மதிப்பீடு தயார் செய்துவிடும்தருவாயில் இருந்தது தற்போது என்ன நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? எப்போது ஆரம்பப் பணிகள் நடைபெறும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சுமார் 24 லட்சம் ரூபாயில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இனிமேல்தான் அரசுக்கு பொறியியல் துறையினரால் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.